4415

Regd. No. M. 878

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மக்ஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 9 } காளயுக்திஹு ஆனிமீ 1918-ஹு ஜூன்மீ { பகுதி 2.

6 - MAR 1924

விஷயங்கள்:

1.	தற்காலநிலைமை.—ஆர். ரஙகஸ்வாமி ஐயர் பி. ஏ.	33
2.	சுதேசக்கல்வி—ஆர். ரெங்காச்சாரியார் எம் ஏ. எல். டி.	41
3.	பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்)—வி. வெங்கு சாமி எம். ஏ., எல். டி.	49
4.	புனர்ஜன்மமும் கர்மமும்—வினவிடை—ஆர். பஞ்சாபி கேசய்யர்	52
5	ஸ்திரீகளுக்கு ஓர் உபந்நியாசம்—மங்களாம்பாள்.	58
6.	பத்திரிகை விமர்சம்.	61
7.	புத்தக விமர்சம்.	62
8.	சமாசாரக்குறிப்பு.	63

அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2.
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
தபால் சார்ஜ் வேறு

மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விக்கிரஹாராதனை—ஒரு சம்பாஷணை கே. எஸ். ராமசந்திரையர் விலை 1—0—0. பூர்ணசந்திரோதயம் சந்தாதார்களுக்கு—0—9. மாணவர்களுக்கு விக்கிரஹாராதனையின் உண்மையைப் புகட்டவல்லது. கிறிஸ்தவப்பாதிரிமார்களின் தூஷணைகளைக் கண்டிக்க உபயோகமுள்ளது. ஒரே தடவையில் 2 பிரதிகள் வாங்குவோருக்கு ஸ்பெஷல் கமிஷன்.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

முந்துங்கள்! முந்துங்கள்!

கிரிமினல் வியவஹார சங்கிரகம்.

சிலபிரதிகள் தான் இருக்கின்றன. இனி அச்சிடப்படமாட்டா.

இதில் இந்தியன் பினல்கோடு, கிரிமினல் புரொஸீஜர்கோடு ஸாக்ஷியச்சட்டம், பிரமாணச்சட்டம், சிறுவர்களைச் சீர்திருத்துவதற்கான ஆக்ட்டு, அடித்தண்டனை ஆக்ட்டு, கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு, கால நிர்ணய ஆக்ட்டு, ஜெயில் ஆக்ட்டு. ஜெயில்ரூல்கள், பவுண்டு ஆக்ட்டு முதலிய ஸாதாரணமாக சகலமான ஜனங்களுக்கும் அத்தியாவசியமாய்த் தெரிந்திருக்க வேண்டிய அநேக கிரிமினல் சட்டதிட்டங்களும் இனிய சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. படிப்பவர்களுக்கு புஸ்தகம் பூராவும் படித்து முடியும் வரை புஸ்தகத்தைக் கீழேவைக்க மனம் வரமாட்டாது.

ஜெயிலில் கைதிகளுக்குப் போடப்படும் அநேகவிதமான விலங்குகளையும், ஜெயிலில் கைதிகள் செய்யும் பற்பல வேலைகளையும் காட்டிய, கைதிகளுடைய அநேக உருவப்படங்களையும் இது அடங்கியுள்ளது.

உயர்ந்த இங்கிலீஷ் கிளேஸ் கடிதாசியில் அச்சிடப்பட்டும், பூராவும் காலிச்கோத்துணிபோட்டு பைண்டு செய்யப்பட்டும் தங்கத்தில்ட்டும் போடப்பட்டுமுள்ள ஓர் அழகான புஸ்தகம். இது மாட்சிமைதங்கிய கவர்ன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டதும், கனம் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள், அட்வோகேட் ஜெனரல், சட்டநிர்மாண ஸபையின் மெம்பர்கள், ஸெஷன்ஸ் ஜட்ஜிகள், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்ட்ரேட்டுகள் முதலிய சகல அதிகாரிகளாலும், நன்கு மதிக்கப்பட்டு நற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பெற்றிருக்கிறது.

இப்போதய காலக்கிரயப்படிக்கு புஸ்தகம் ஒன்றுக்கு ரூ 5-க்கு விற்றாலும் கட்டிவரமாட்டாது. அப்படியிருந்தும், பிரதி ஒன்றுக்கு கிரையம் ரூ. 2-8-0 தான் வைக்கப்பட்டிருக்கிறது. வி. பி. சார்ஜ் தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம்—ஜியார்ஜ் டவுன், கிருஷ்ணன் கோவில் தெரு, 24ம் நெம்பரில், 'கல்பதரு ஆபீஸ்' மானேஜருக்கு எழுதிக்கொள்ளவும்.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 } 1918-௵ ஜூன் மீ காளயுக்தி ௵ ஆனி மீ { பகுதி 2.

தற்கால நிலைமை.

“தியசாபிகல் எடுகேஷனல் டிரஸ்டு” என்ற சபையின் முக்கிய நோக்கம் யாதெனில் “கல்வி கற்பித்தல் ஒரு கைங்கரியம்” என்பதே. இந்த டிரஸ்டுக்குச் சேர்ந்த சிறந்த பள்ளிகள் இங்கிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் ஏற்பட்டிருக்கின்றன, என்பது சித்தாந்தத்தை விளக்கின்றது. மேற்கூறிய நோக்கம் தான் இந்தியாவில் இந்த டிரஸ்டு தோன்றியதற்குக் காரணமாகும் இந்த டிரஸ்டுக்குச் சேர்ந்த இந்தியக் கல்லூரிகளையும் பள்ளிகளையும் தேசிய சர்வகலா சாலைக்கு கொடுத்துவிட்டது யாவரும் அறிவர். அந்த சர்வகலாசாலைக்குள்ளாக புதிதாக சில பள்ளிகள் ஏற்பட்டிருப்பது மிகவும சந்தோஷகரமான செய்தி. சென்னையில் “வியாபார காலேஜ்” ஒன்று ஏற்பட்டிருக்கிறது. காலஞ்சென்ற தேசபக்தர்கள், உயிருடன் இருக்கும் தேச பக்தர்கள் பேரால் மூன்று வருஷத்துக்கு உதவிச் சம்பளம் கொடுப்பதற்காக அநேக நிதிகள் ஏற்பாடாகியிருக்கின்றன. ஒவ்வொரு மாதத்திற்கும் 30 ரூ வீதம் 36 மாதத்திற்கு 1080

ரூ ஆக ஒவ்வொரு நிதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களில் ஏற்றவன் என்று தேர்ந்தெடுக்கப் பெறும் ஒவ்வொ மாணாக்கனுக்கும் மாதம் 30 ரூ வீதம் உதவிச் சம்பளம் கொடுக்கப்படும். 3 வருஷ காலம் இக்கல்லூரியில் உயர்தர வித்தை கற்பிக்கப்படும். ஏராளமான மாணாக்கர் சேருவார்கள் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது. மேலும் அடையாற்றில் சாஸ்திரக்காலேஜ் ஒன்று ஏற்படும். வியவசாயக் கல்லூரியானது அதற்குள் அடங்கியது. ஸ்திரீகளுக்காக ஒரு காலேஜ் ஏற்படுமாம். இது தவிர புதிதாக அநேக தேசியக் கல்லூரிகளும், பள்ளிகளும் ஏற்படுவதால் அவைகளுக்குப் போதிய உபாத்திமாரைத் தேர்ச்சி பெறச் செய்வதாக புதிதாக ஒரு உபாத்திமாரைப் பழக்க ஒரு கல்லூரியும் ஸ்தாபிக்கத் திர்மானித்திருக்கிறார்கள்.

***

மதனப்பள்ளியிலிருந்த பல சிறந்த உபாத்தியாயர்கள் இந்தியா முழுதும் புதிதாக ஏற்படும் கல்லூரிகளுக்குப் போகிறார்கள். எப்படி பக்குவமான காலத்தில் சில மரங்களின் பழங்கள் வெடித்து அவைகளில் உள்ள விதைகள் காற்றினால் வெகுதூரம் வரை சிதரப்படுமோ, அங்ஙனம் இக்கல்லூரியிலிருந்த உபாத்திமார் இந்தியாவில் பற்பல பாகங்களுக்குச் சென்று ஆங்காங்கு உயர் நோக்கங் கொண்ட கல்லூரிகளையும், சிறந்த தேச பக்தர்களையும் பெருக்குவார்கள்.

***

இந்தியா முழுவதும் கடுமையான கோடை காலத்திற்காக விடுமுறை நாள் ஏற்படுவது வழக்கமல்லவா. அந்த விடுமுறை நாட்களை உபயோகமாகவும், சந்தோஷமாகவும், கழிப்பதற்காக சில வருஷங்களாக ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அடையாற்றில் இந்த கோடையிலும் மேமீ 1உ முதல் 15 நாளைக்கு "உபாத்திமாருக்குக் கோடைப்பள்ளி" யொன்று நடந்தது. மேமீ 13உயன்று காலை மாது ஸ்ரீ பெஸண்டம்மாளவர்கள் அங்குக் கூடியிரு

ந்த உபாத்திமாரை வரவேற்றார்கள். ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் 10 மணி வரை சிறந்த உபந்யாசங்கள் நிகழ்ந்தன. மாலையில் சர்ச்சைகள் நிகழ்ந்தன. ஏன் என்றால் ஒருவர்க்கொருவர் வாதாடினால் ஒழிய உண்மையும் தெற்றெனப் புலப்படாது; மனதிலும் பதியாது. இரவில் 8½ மணி முதல் 10 மணி வரை வெகு விநோதமாகவும் இன்பமாகவும் காலம் கழிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பாட்டுக் கச்சேரிகள் சில நடந்தன. ஆங்கிலச் சங்கீதக் கச்சேரிகளையும் இந்திய சங்கீதக் கச்சேரிகளையும் ஆங்கிலரும் இந்தியரும், கேட்டு ஆனந்தத்தையும், விநோதத்தையும், அடைந்தார்கள். ஸ்ரீமதி ஸரோஜினி தேவியவர்கள் தம்முடைய கீர்த்தனைகளை இனிய குரலுடன் பாடினார்கள். அவருடைய தம்பியாகிய ஹரேந்திரநாத சட்டோபாத்தியாயர் தம்முடைய கவனங்களைப் பாடினார். இன்னும் தேர்ச்சி பெற்ற பல கவிகளும் தம்முடைய கவனங்களை மனதுருகப் பாடினார்கள். இவை தவிர கிரேக்க நாட்டியத்தை சில மாது மணிகள் நடித்துக் காட்டினார்கள். கவி சக்கரவர்த்தி ரவீந்திரநாத டாகோர் அவர்களின் நாடகமொன்றை நடித்தார்கள். ஆக இவ்விதமெல்லாம் வெகு பிரயோஜனமாக யாவரும் காலம் கழித்தார்கள்.

*
* *

அந்த பதினைந்து நாட்களுக்குப் பிறகு குவாலியரில் விக்டோரியா காலேஜில் உபாத்தியாயவராகயிருக்கும் புரொபசர் ஆர். கே. குல்கர்ணி என்பவர் ஸ்ரீ ராமேசுவரம் போகும் மார்க்கத்தில் இங்குத் தங்கி இரண்டு அரிய உபந்யாசங்கள் செய்தார். அவர் பெற்றோர் உபாத்திமார் சங்கத்தின் கொள்கைகளைப் பற்றி ஒரு உபந்யாசமும் லோககுருவின் அவதாரத்தைப் பற்றி மற்றோர் உபந்யாசமும் செய்தார்.

*
* *

மஹாத்மா காந்தியவர்கள் கொண்ட விரதம் நன்கு நிறைவேறிற்று. அது யாதெனில் கூறுவோம். பம்பாய் ராஜதானியில் வடக்கே கேரா ஜில்லா இருக்கிறது. அந்த

ஜில்லாவில் விளைச்சல் சரியானபடி இல்லாமல் பஞ்சம் ஏற்பட்டது. ராஜாங்கத்தார் ஏற்படுத்திய விதிகளின்படி $\frac{1}{4}$ வாசி விளைச்சலுக்கு மேற்படாதிருந்தால் ராஜாங்கத்தார் அவ்வருஷத்துக்குச்செல்லவேண்டிய கிஸ்தியை வசூல் செய்யாமல் அடுத்த வருஷம் வரை தள்ளிவைக்கப்படும் என்று ஏற்பட்டிருக்கிறது. சென்ற மகசூல் காலத்தில் மிகவும் சொற்பமான வரும்படியாயிருந்த படியாலும் மேற்கூறிய விதிப்படி $\frac{1}{4}$ விளைச்சலுக்குக்குறைந்த மகசூலாக விருந்ததாலும் குடிகள் அவ்வருஷத்து கிஸ்தியை விதிப்படி அடுத்த வருஷத்திற்கு ஒத்திவைக்கவேண்டும் என்று கோரினர்கள். ஆனல் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கீழ் வேலைக்காரர்களான கர்ணம் முதலியோரின் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு மகசூலானது $\frac{1}{4}$-க்கு மேற்பட்டதாக இருந்தது என்றும், ஆகையால் வசூலை அடுத்த வருஷத்துக்குத் தள்ளிவைக்க முடியாதென்றும் உத்தரவிட்டார்கள். குடிகள் ஏழைகளானபடியால் அவர்கள் சாவ்காரர்களிடம் கடன் வாங்காமலும், தங்களுடைய சொத்துக்களையும் மாடுகளையும் விற்காமலும் கிஸ்தி செலுத்தச் சக்தியற்றவர்களாயும் இருந்தார்கள். அதிகாரிகள் உத்தரவானது ஜனங்களுக்குள் அதிக கொடுமையையும் துக்கத்தையும் விளைத்தது. இச்சமயத்தில் இந்த விஷயம் ஸ்ரீமான் காந்தியவர்களுக்குத் தெரிந்தது.

*
* *

நேராக அவர் ஊர் ஊராய்ப்போய் விசாரித்தார். குடிகள் சொல்வது உண்மை யென ஓர்ந்தார். உடனே இவரும் குடிகளுடன் சேர்ந்து சர்க்கார் அதிகாரிகளுக்கு மனுச்செய்து புதிதாக ஒரு விசாரணை சபையை ஏற்படுத்தி அதில் சர்க்கார் அதிகாரிகளும் ஜனங்கள் வகை பெரிய மனுஷர்களும் இருக்கும்படி செய்து அச்சபையைக் கொண்டு இவ்விளைச்சல் $\frac{1}{4}$ பாகத்துக்கு மேற்பட்டதா குறைந்ததா என்று தீர்மானிக்கும்படிக்கும் அப்படி தீர்மானமாகும் வரை வரியை வசூல் செய்யாமல் நிறுத்தி வைக்கும்படிக்கும்

அத்தீர்மானத்தின் பிரகாரம், $\frac{1}{4}$ விளைச்சலுக்கு மேற்பட்டால் வரியை வசூல் செய்யும்படிக்கும், அதற்குக் குறைந்தால் வசூலை இவ்வருஷம் நிறுத்தும்படிக்கும் வேண்டினர். ஆனால் அரசாங்கத்தார் இந்நியாயமான வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அப்பால் "ஸெர்வண்டு ஆப் இந்தியா" என்ற இந்திய சேவகர் சங்கத்தின் அங்கத்தினர் சிலராலும் விசாரணை செய்யப்பட்டது. அவர்கள் விளைச்சல் $\frac{1}{4}$ வாசிக்குக் குறைதான் என்று தீர்மானித்தார்கள். அதைத் தெரிவித்தும் மறு விசாரணை செய்ய அரசாங்கத்தார் இணங்கவில்லை.

***

ஆகையால் சுமார் மூன்று மாதத்திற்கு முன் அதாவது 22—3—18ல் மகாத்மா காந்தியவர்கள் குடிகளுக்குப் போதித்ததாவது: "ஸத்யக்ராஹத்தைக்" கடைப் பிடியுங்கள். சர்க்கார் விதிகளில் $\frac{1}{4}$ விளைச்சலுக்கு மேற்படாமலிருந்தால் வசூலை ஒத்திவைக்கப்படும் என்றிருக்கிறது. உண்மையாய் உங்கள் நிலத்தில் விளைச்சல் அதற்குட்பட்டிருந்தால் நீங்கள் கிஸ்தி செலுத்துவதில்லையென்று சங்கற்பியுங்கள். செலுத்த சக்தியுள்ளவர்களாயிருந்தாலும், செலுத்தாதீர்கள். நிலங்களை யெடுத்துக் கொண்டாலும், ஆடுமாடுகளையும் வீட்டிலிருக்கும் சாமான்களையும் ஜப்தி செய்தாலும் செய்யட்டும். ஜப்தி செய்ய நீங்கள் உதவி செய்யக் கூடாது. ஆனால் ஜப்தி செய்யவரும் உத்தியோகஸ்தர்களை நீங்கள் மரியாதையாய் நடத்தவேண்டும். ஒருவரையும் அவமதிக்கக் கூடாது. இவ்விரதத்தைப் பணக்காரர்களும் ஏழைகளும் ஒருங்கே அனுஷ்டிக்கவேண்டுமென்று ஊர் ஊராகச் சொல்லிவந்தார். சர்க்காரில் விசாரணை கமிட்டி நியமித்தால் இவ்விரதத்தை நிறுத்தி விடப்படும் என்றும் கூறினார். இம் மகாத்மாவின் பேரிலுள்ள நம்பிக்கையினால் நூற்றுக்கணக்கான பேர்கள் சத்யக்ராஹ விரதத்தைக் கொண்டார்கள். அரசாங்கத்தார் நிலங்களை எடுத்துக்கொண்டார்கள். இருந்தபோதிலும் குடிகள் விரதத்தைக்கைவிடவில்லை. அப்பால்

அரசாங்கத்தார் நிலங்களை எடுத்துக்கொள்வதை மாற்றி மாடுகளையும், சொத்துக்களையும் ஜப்திசெய்தார்கள். அதையும் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருந்தும் குடிகள் விரதத்தை அனுஷ்டித்து வந்தார்கள். ஏராளமான கஷ்ட நிஷ்டூரங்களுக்குட்பட்டிருந்தும் குடிகள் இவ்வளவு தூய மனத்துடன் பொறுமையுடன் இருந்தது ஆச்சரியம். கடைசியில் சில நாளைக்கு முன்னர் அதிகாரிகள் ஸ்ரீகாந்தியடிகளைக்கண்டு ஒருவிதத்தீர்மானத்துக்கு வந்தார்கள். குடிகளில் யார் யார் தீர்வை செலுத்த முடியுமென்று அவர்களே எண்ணுகிறார்களோ அவர்கள் தீர்வையை உடனே செலுத்தட்டும்; தீர்வைசெலுத்த முடியாதென்று யார் எண்ணுகிறார்களோ அவர்களுடைய தீர்வையை அடுத்த வருஷத்தில் செலுத்தலாம் என்று அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டார்கள். இதற்கு ஸ்ரீ காந்தியடிகள் இணங்கி குடிகளை நோக்கிச் சொல்லுகிறார்: அரசாங்கத்தார் இணங்கிவிட்டதால் உங்களில் யார் சாவகாரிடம் சென்று கடன் வாங்காமலும், சொத்துக்களை விற்காமலும் கிஸ்தியைச் செலுத்த முடியுமோ அவர்கள் அவசியம் கிஸ்தியைச் செலுத்தவேண்டும். செலுத்தக் கூடியவர், முடியாதவர் என்றதை முடிவில் தீர்மானிப்பவர் ராஜாங்கத்தாராஞலும் நீங்கள் உண்மையாகக் கூறிஞல், கூடுமான வரை கிஸ்தியை செலுத்தக் கூடியவர்கள் செலுத்திஞல், அதிகாரிகள் அவர்களைத்தவிர மற்றவர்களை அடுத்த வருஷம் வரை கேட்கமாட்டார்கள் என்ருர்

***

இந்த ஸத்யக்ராஹ முயற்சியில் கவனிக்கவேண்டியது என்னவெனில் அனேகமாக படிக்கத் தெரியாத குடித்தனகாரர்களும் ஸ்திரீகளும், சத்யத்தைக் காப்பாற்றுவதற்காக படாத பாடெல்லாம் பட்டு தம் விரதத்தை காப்பாற்றிஞர்கள் என்பதே. அநேக செல்வவான்களும் தாம் செலுத்திஞல் தங்கள் மாதிரியிஞல் பயந்து ஏழைகளும் சொத்துக்களை விற்று பணத்தை செலுத்திவிடுவார்கள்; ஆகையால் அப்படிச் செய்யக் கூடாதென்று அவர்களும் கிஸ்தி செலுத்தாமலிருந்தார்கள், அருமையையாய் வளர்த்து வந்த தம்,

முடைய எருமை மாடுகளையும், இதரக் கால் நடைகளையும் ஐப்தி செய்துகொண்டு போய் வழக்கப் பிரகாரம் அவைக ளுக்குப் போதுமான போஷணையைக் கொடுக்காமல் அவை கள் வருந்துவதைக் கண்ணுற்றும், தாம் கொண்ட விரதத் தினல் ஒன்றும் செய்யாமலிருந்ததே மிக பரிதாபம். ஒரு கிராமத்தில் ஸத்யக்ராஹத்தைக் கைக்கொண்ட ஒரு தனி கனுடைய வேலைக்காரன் யஜமானுக்குத் தெரியாமல் கிஸ்தி யைச் செலுத்திவிட்டான். அததனிகன் தான் கொண்ட விரதத்தின் பங்கத்தைப்பற்றி ஸ்ரீ காந்தியடிகளிடம் வருந் திக் கூறி இதற்கு மாறு யாது செய்வது என வேண்ட, கிஸ் தி செலுததியதனல் எங்நிலம் மீட்டப்பட்டதோ அதை தர்மத்துக்குக் கொடுத்துவிடும், என்று அக்ஞாபிக்க அங்ஙன மே செய்தார். எதுவரினும் சதயத்தைக் கைவிடக்கூடாது என்று எவ்வளவு தீவிரமாய் ஒன்றுமறியாதவர் என்று நாம் கருதும் குடிகள் விரதத்தைக் காப்பாற்றினர்கள் என் பது ஆச்சரியத்தை விளைககிறது. ஒரு கிராமத்தில் சில சத்யக்ராஹிகள் தங்கள் கால் நடைகள் ஐப்தி செய்திருந் தவைகளை மீட்டினதாகத் தெரியவந்தது. ஸ்ரீ காந்தியடி கள் அக்கிராமத்தில் பிரசங்கம் செய்த சமயத்தில் அந்த சங்கதியைக் கேள்விப்பட்டு அதைப்பற்றி மிகவும் கடிந்து கூறினர். 'சத்யக்ராஹிக்கு இது அழகில்லை' நியாய முறையி னின்று அணுவளவும் பிசகக் கூடாது. ஐப்தி செய்த கால் நடைகளை தொட்டால் அது பெரும் தவறு. ஆகையால் அப் படி செய்த எந்த ஸத்யக்ராஹியாவது இக்கூட்டத்திலிருந் தால் அவன் முன்வந்து தன் குற்றத்தை ஒப்புக்கொள்வது தான் சரியாகும், என்றார். உடனே அங்கேயிருந்த ஒருவர் ஸ்ரீ மானிடம் வந்து தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான் உடனே அம்மாட்டை அதிகாரிகளிடம் கொண்டு போய் விட்டு தன் குற்றத்தையும் ஒப்புக்கொண்டு வரும்படிக்கும் அதனல் என்ன அபராதமோ, தண்டனையோ, விதிக்கப்படி னும், அதை அனுபவிக்கும்படிக்கும் அக்ஞாபித்தார். அங்ங னமே அக்குடியானவனும் செய்தான்.

"ஸத்யக்ராஹிக்கு யாதொரு பயமும் இருத்தல் நியாயமில்லை. பயம்தான் நாட்டுக்கே கெடுதல்" என்பது அவர் கொள்கை. ஜில்லா கலக்டருக்கும் மேல் அதிகாரியான ஒரு கமிஷனர் குடிகளைக் கூட்டி கிஸ்திகளைக் கொடுக்கும்படிக்கும் விரதபங்கம் செய்தால் பாபமில்லை யென்றும், அது தெரியாமல் கொண்ட விரத மாகையால் அதை பங்கம் செய்தலே நியாயமென்றும் கூறினர். அதற்கு குடிகள் பயமில்லாமல் முன்னின்று மிகவும் மனவுறுதியுடன், ஆனல் மிகவும் மரியாதையாக, விரத பங்கம் செய்ய மாட்டோம் என்று கூறினது மிகவும் ஆச்சரியமான விஷயம். சிறிய கணக்கன் முதலியோரைக் கண்டு கூடப் பயப்பட்டு நடுநடுங்கும் குடிகள் பெரிய உத்யோகஸ்தரிடம் பயமின்றி நின்று வாதாடியது சத்யக்ராஹ விரதத்தின் புண்யகரமான பிரயோஜனமாகும்.

***

மேற்கூறியவற்ருல் எங்ஙனம் நாம் ஒன்று மறியாதவர் என்றிகழும் சாதாரண மனிதரிடமும் மிகவு போற்றத்தக்க சீரிய குணங்கள் பொதிந்து கிடக்கின்றன வென்றும் மேன்மக்கள் தோன்றி அம்மேலான குணங்களையே யெழுப்பினல் மட்பாண்டங்களைத் தங்கக் குடங்களாக ஆக்கினற் போல், சாதாரணர்களைக் கூட உயர்ந்த ஸத்யக்ராஹிகளாக்கலாம் என்றும் விளங்குகிறது,

***

ஸத்யக்ராஹ விரதமானது அனுஷ்டிப்பதற்கு சுலபமானதல்ல. பிறருக்கு யாதொரு தீங்கும் இழைக்கக்கூடாது. விரத மனுஷ்டிப்பதனல் எவ்வளவு கொடிய தீங்குகள் நேரிடினும் அவை முழுவதையும் ஸத்யக்கிராஹியே அனுபவிக்கவேண்டும். அப்படிக் கஷ்டப்படுவதே தபஸாகும். அத் தபோக்கினியினல்அவனுடைய பாபங்களும, கெட்ட வாசனைகளும் எறிக்கப்பட்டுஅவன் பரிசுத்தனுகிருன். "உண்மை" எப்போதும் ஜயிக்கும் என்பது, என்றும் பொய்யாகாத உண்மையாகையால் ஸத்யக்ராஹி எபபோதும் ஜயமடைவான் என்பது நிச்சயம. ஆனல் இவன் சொல்லும் வார்த்தையிலும இவன நடத்தையிலும்அணுவளவு பொய்யும் கலக்கக் கூடாதென்பது அவசியம்.

ஆர். ரெங்கசாமி ஐயர்.

சுதேசக்கல்வி.

8-வது தொகுதி. 422-ம் பக்கத்தொடர்ச்சி.

நாம் இதுவரை வரைந்தவைகளிலிருந்து நமது புராதனக் கல்வி முறையின் பெருமையும், பலகாரணங்களால் நாம் அதை நழுவவிட்டதால் நம் நாடு தற்காலமடைந்த சிறுமையும் நன்கு புலனாகும். ஆயினும் நமது புராதன முறை உலகமுள்ளளவும் உபயோகமுள்ளதாக விருக்குமெனவும், அதற்குக் காலத்திற்கேற்பச் சீர்திருத்தமும் மாறுபாடுகளும் ஏற்படாவெனவும் நம்பி மதிமோசம் போகக்கூடாது. அதன்மேலுள்ள அபிமானத்தால் பலர், 'நம்முறை என்றுமுள்ளது. கடவுளாலாயது. உலகம் அழியினும் அதற்கு அழிவு கிடையா' தென வீண்பெருமை கூறுவர். நாம் முன்னர்க்கூறியபடி காலத்திற்குத்தகுந்தபடி பழையவற்றைப் போக்குதலும், புதியவற்றைப்புகுத்தலும் ஒவ்வொரு ஜாதியார்க்குள்ளும் உண்டு. பிற ஜாதியாரிடம், சிறந்தகொள்கைகளும் கருவிகளும் உளவாயின் அவற்றைத் தாம் கையாண்டு, தம்மை முன்னிலும் உயர்த்திக் கொள்வது, இக்காலத்தார்க்கு மிகவும் முக்கியமானது.

இவ்வித மாறுதல்களைப் புகுத்தும்போது, நாட்டின் முறைகளுடன் முரணப்படாமல் காத்து அவற்றை ஒட்டியே மாறுதல்களைச்செய்வது நலந்தரும்.

சிறிது காலமாக நம் நாட்டில் பலதுறைகளிலும் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எத்துறையிலேனும் மனிதர் விருத்தியடைய வேண்டுமாயின், கல்வியறிவு அவசியம். இந்த அடிப்படை இல்லாவிடின், ஓர் சீர்திருத்தமும் நிலைபெறாது. ஆதலின் இக்காலத்தில் நம் நாடும் பிறநாடுகளையொப்ப உயர்நிலையை அடையவேண்டுமாயின், நமது கல்வி முறை காலத்திற்கேற்பச் சீர்திருந்தவேண்டும். நமது கல்வியின் லக்ஷியம் ஈதெனவும், அதையடையத்தகுந்த

வழிகள் இவை எனவும், இது காறும் நாம் அறியாமல் பல விதமான துன்பத்திற்காளானோம். அவ்விதம் இனி நேராத படி விலக்கிக்கொள்ளுவதற்கும், மற்ற தேசங்களில் சீர் திருந்துவதுபோல், நமது கல்விமுறை சீர்திருத்தம் பெற்று தேசத்திற்கு நன்மை விளைவிப்பதற்கும் நாம் காலதாமத மின்றிப் பாடுபடவேண்டும். நமது முயற்சி யெல்லாம் விரைவில் பயனடையவேண்டுமாயின், பின் குறிக்கப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் நமது நண்பர்கள் கருத்துவைத் துப் படித்து, அதை எவ்வண்ணம் அனுபோகத்திற்குக் கொண்டு வரலாமென்பதைப் பற்றிச்சிந்திப்பது அத்யா வசியம்.

1. முதல் முதல் கல்வி முறையைச் சீர்திருத்துவது நம்மவரின் கையில் இருத்தல் வேண்டும். தற்போது அன்பரது கையில் அது உள்ளது. நமது பழக்க வழக்கங்களையும் பழைய முறையையும் அவர் அறிய விரும்புவதில்லை. அப்படி விருப்பமிருந்தாலும், பலகாரணங்களால் அவர் அறிந்துகொள்வது சாத்தியமாகாது. விபரீதவுணர்ச்சி யே அவரிடம் பொருந்தியுள்ளது. தாமறிந்த முறைகளை இங்கு நாட்டுவதிலும், தம்மனத்தில் உதயமாகும் கருத்துக் கள் எவ்வாறு பயன்படுமென்பதைப் பரிசோதிப்பதிலும் அவர் மனஞ்செல்கின்றது. எவ்விதப்பயனை நம்மவர் அடைவார் என்பது அவர்மனதில் எழுவதில்லை. சில வேளை களில் கண்ணை மூடிக்கொண்டு இருட்டறையில் குதிப்ப தைப்போலச், சில மாறுபாடுகளை முன்பின் பாராது செய் கின்றனர். "நரிக்குக்கொண்டாட்டம், நண்டுக்கு பிராணா வஸ்தை" என்பதைப்போல அவர்கள் ஆர்ப்பாட்டத்துடன் செய்யும் மாறுதல்களால் துன்பம் அடைவது நாமே. ஆங்கி லரது குழந்தைகளுக்குத்தனியே பள்ளிக்கூடம் ஏற்பட் டுள்ளனவாதலின், அடிக்கடிசெய்யும் மாறுபாடல்களெல் லாம், அப்பிள்ளைகளுக்கும், அவரது பெற்றோராகிய ஆங்கி லர்க்கும் யாதொரு கெடுதியையும் விளைக்கிறதில்லை.

கல்வித்துறையில் சுதந்திரம்பெறுவது நமக்கு இலகுவில் கிட்டாது. நமது சர்வ கலாசாலைச்சங்கத்தில் ஆங்கிலரே முக்கியமான உத்தியோகங்களில் அமர்ந்துள்ளார்கள். அதிலும் சென்னையிலுள்ள சிலகலாசாலைகளைச்சேர்ந்தோரே நமது சர்வ கலாசாலைக் கார்யங்களனைத்தையும் நடத்திவருகின்றனர். நம்மவர் சிலர் அச்சங்கத்தில் இருப்பினும், நாம் அவருக்குத்தகுந்தபடி உதவி செய்யாததாலும், அவர்களுக்குள்ளேயே ஒற்றுமையும், கட்டுப்பாடுமில்லாமையாலும், ஆங்கிலரைப்போல ஏகோபித்து காரியங்களைச்செய்வதற்கு அவர்களுக்கு இயலவில்லை. தகுந்த மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அச்சங்கத்தில் நம்மவர் சொல்லும் அபிப்பிராயங்களும், காட்டும் வழிகளும் மதிக்கப்படுமாறு செய்வது நமது முக்கியக் கடமையாகும். ஆங்கிலம் கற்றோர் தேசபாஷைகளில் புத்தகங்கள் எழுதி ஞானத்தைப் பரவச்செய்வார் என்று முன் எதிர்பார்த்தார்கள். அதற்கு ஏற்பட்ட இடையூறுகள் பல. இதனால் கல்வி நாடெங்கும் பரவுவதற்கு முடியவில்லை. ஜனங்களுக்குள் முன் இருந்த அஞ்ஞானம் அதிகமாகின்றதே தவிர குறைவதற்கு வழியைக்காணோம். முன்னாளிலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களும் கிராமப்பள்ளிகளும் இருந்த இடம் தெரியாமல் எவ்விடமோ பறந்துபோயின. ஆதலின் நமது தேச பாஷைகளுக்குப் பிராபல்யம் கொடுப்பது இன்றியமையாதது.

2. நமது தேச பாஷைகளில் பாடங்கள் கற்பிக்கவேண்டும். தேசபாஷைகளில் எல்லா கலைஞானங்களையும் பரப்பவேண்டும். பிள்ளைகள் தேசபாஷைகளிலேயே எல்லாப் பாடங்களையும் பயிலவேண்டும். ஆங்கிலத்திற்கு (காலேஜில்) உயர்தர கலாசாலைகளில் பிராபல்யம் கொடுப்பது கொஞ்சகாலம்வரை அவசியம் தான். அதற்குக்கீழுள்ள கலாசாலைகளில் ஆங்கிலத்தில் எழுதவும் பேசவும் தெரிவதற்கு எவ்வளவு எம்முறையாகக் கற்கவேண்டுமோ அவ்வளவு கற்றால் போதுமானது. இதேமாதிரிதான் காலேஜி

லும் இருக்கவேண்டும். ஆங்கிலத்தில் பாண்டியத்தியம் பெற விரும்புவோர் அதையே முக்கிய பாடமாக எடுத்துக் கொள்ளலாம்.

அனுவசியமாக ஒவ்வொருவரும் ஆங்கிலத்தில் பல வற்றை, அடி, நுனிதெரியாது அரை குறையாக கற்று பரீட்சை யானவுடன் அனைத்தையும் மறந்துபோவதான இப்போதுள்ள முறை அடியோடு தள்ளத்தக்கதே.

3. பாடப்புத்தகங்களும், பாடங்களும், சில சீர்திருத்தங்களைப் பெறவேண்டும். இத்தனைப் புஸ்தகங்களும், இத்தனை பாடங்களும் ஒரே தடவையிற் படிக்கவேண்டுமென்பது நமது தலைவிதியோ? எவ்வளவுதாங்குமோ அவ்வளவே கற்றல் நலம். போதனு முறையும் முற்றிலும் மாறுபடவேண்டும். கீழ்வகுப்புக்களில் யாவையும் விளையாட்டாகவே கற்பிக்கப்படவேண்டும். குழந்தைகள் இயற்கையிலேயே சுறு சுறுப்பும் புதிய பண்டங்களையும் விஷயங்களையும் கண்டறிய அவாவும் உடையவராதலின், அவ்வாவின் வழியே அவர்களுக்குப் பயிற்றவேண்டும். முதல் இரண்டு வருஷங்ளில் பிள்ளைகளுக்கு புஸ்தகமென்பதே கூடாது. பின்னர் ஒவ்வொன்றாக அவர் கையில் புஸ்தகங்களைக்கொடுக்கலாம்.

4. பள்ளிக்கூடத்திலிருந்து படித்து வெளியேறும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஜீவனோபாயத்திற்கு வேண்டிய ஒரு முறையைக்கற்கவேண்டும். இப்போது ஒரு பள்ளிக்கூடமாவது அவ்வித சக்தியைப்பிள்ளைகளுக்கு போதிப்பதில்லை. அதனல் பிள்ளைகள் படுந்துயரத்திற்கு அளவே கிடையாது. ஜீவனத்திற்கு மார்க்கத்தைக் காண்பித்தால் நாடு அதிக சீக்கிரம் மேனிலையை அடையும், ஆதலின் பள்ளிக்கூடத்தில் தொழிற்சாலைகளும் ஏற்படவேண்டும்.

5. சாஸ்திரப்படிப்பு அதிகமாகவேண்டும். நாட்டின் மேன்மைக்கும், பொருள்வருவாய்க்கும் அதுவே முக்கியமானது. படித்த சாஸ்திரங்களை எவ்வாறு மனிதர்க்குப் பயன் படுத்தலாமென்பதையே கற்றோர் கருதுவாராயின்

அவரே நாட்டிற்கு நன்மை பயப்பவராவர். நம் நாட்டில் எவ்வளவோ விளைபொருள்கள் இருந்தும், அவைகளைப் பண்படுத்தப் போதிய அறிவும், ஊக்கமும், முதலும், ஜனங்களுக்கில்லை. அந்நிய நாடுகளுக்கு அவைகளைக்குறைந்த விலைக்கு விற்று அவர் அப்பொருள்களைப் பண்படுத்திய பிறகு, அதிக விலையைக் கொடுத்துத் திரும்பவும் அவற்றை பெறுவது இப்போது வழக்கமாகவிருக்கிறது. நாட்டிற்கு அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு கணக்கேது? வரவர ஈன நிலையை நாடு அடைந்து வருவதற்கு இதுவே காரணம். நம்மவர்க்குள் அநேகர் ஒருநாளைக்கு ஒரு வேளையே புசித்து, உடல் இளைத்து நரம்பும் தோலும் எலும்புமே மிச்சமாக உயிர்வாழ்ந்து வருவதை நாம் கண்ணெரியக்காண்கின்றோமே. இனியேனும் நாம் இக்குறைகளை உணர்ந்து, அதை நீக்குவதற்கு வேண்டிய வழிகளைத்தேடுவோமாக. தற்கால முள்ள பள்ளிகளிலெல்லாம் தொழில்கள் கற்பிக்கப்படவேண்டும். நாடெங்கும் புதிய பாடசாலைகளை ஜனங்களே ஏற்படுத்தி அவைகளில் நம் கருத்துக்களுக்கிசைந்தவாறு பாடங்களையும், முறைகளையும் புகுத்தி நாட்டின் மேன்மையையே பிள்ளைகளின் கண்முன் நிறுத்தி, அதற்கு ஒவ்வொருவரும் பாடுபடவேண்டியது அவசியமென்பதை வற்புறுத்தவேண்டும். பிள்ளைகள் யாவரும் நல்ல தேசாபிமானிகளாகப் பள்ளியினின்றும் வெளியேறவேண்டும்.

6. தேகப்பயிற்சி மிகவும் முக்கியம். அது இப்போது பிள்ளைகளுக்கு இல்லையென்றே சொல்லலாம். தற்காலத்தில் பிள்ளைகளின் தேகக்கூறு மிகவும் கேவலமாக இருக்கிறது. சிலவிடங்களிலேயே ஆசிரியர் பிள்ளைகளோடு உற்சாகத்துடன் கலந்து விளையாடுகிறார்கள். ஆயினும் விளையாட்டிற்கேற்பட்ட நேரம் மிகவும் சொற்பமாகவுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பதிவுப்புஸ்தகம் வைத்துக்கொண்டு பிள்ளைகளின், கனம், உயரம், பருமன், முதலியவைகளை ஆறு மாதத்திற்கொருமுறை அளந்தறிந்து எவரேனும் பலஹீனமடைவதாகக்கண்டால், உடனே அவர்க்கு

வேண்டிய சகாயஞ்செய்ய வேண்டும். அதிகப்படிப்பாலும் சரியான முறைகளை அனுசரியாததாலும் பிள்ளைகளது கண்களும், தேகமும் இளமையிலேயே கேடுறுகின்றன. இதையும் கவனிப்பது நலம். தொத்துவியாதிகளும் பிறவும் பிள்ளைகளிடம் பரவி வருகின்றன. அவைகளை ஆரம்பத்திலேயே கண்டு தடைப்பது ஆசிரியர் கடனாயினும், இக்காலத்து ஆசிரியருக்கு அது முடியாததன்றோ? ஆதலின் குறிப்பிட்ட காலங்களில் வருஷத்திற்கு இரண்டு முறை பிள்ளைகளின் தேகத்தை நன்றாய் பரீட்சித்து குறைகள் காணப்படின் அவற்றிற்குவேண்டிய சிகிச்சையை செய்யவேண்டும்.

7. மதப்பயிற்சி யவசியம். நமது கல்வி முறையெல்லாம் மதத்தோடு சம்பந்தம்பெற்று உள்ளவை. இப்போது நம் நாட்டில் பல மதத்தினர் இருப்பதால் மதங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு நமது கல்வி முறையை சீர்படுத்தி எவ்வாறு நாட்டுவது என்று மயங்கவேண்டுவதில்லை. எல்லா மதங்களிலும் முக்கியாம்சங்கள் ஒத்துள்ளன. அந்தந்த மதத்தினரும் தங்கள் கல்வி முறையைத்தம் மதங்களோடு இணைத்தேவளர்த்து வந்துள்ளார்கள். தாய் பாஷைக்காகவும், தாய் நாட்டிற்காகவும் யாவரும் உழைத்துவரும் இக்காலத்தில், சாரமற்ற விஷயக்குப்பைகளைக் குன்றுகள் போலப்பெருகி, வீண்வாதங்களையும் சண்டைகளையும் விளைப்பது மதியீனமாகும் இதுவரை நாம் ஒருவரோடொருவர் அடித்துக்கொண்டு அனுபவித்த பலன் போதும். இனியேனும் நாம் அனைவரும் ஒத்துவாழமுயல வேண்டும். இதற்குச்சிறந்த சாதனம் ஒன்றே உள்ளது. அது நமது மதவெறுப்பை முற்றிலும் மாய்ப்பதுதான். இவ்வாறு செய்வதற்கு ஒரு இலசான வழியுள்ளது. நமது பிள்ளைகளைக்கொண்டே அதைச் செய்யவேண்டும். இப்போது நமது பள்ளிக்கூடங்களில் எல்லா மதத்தினரும் படிப்பதால், பாடம் தொடங்குவதற்கு முன் பிள்ளைகளை

வரையும் ஓர் இடத்தில் கூட்டி, ஒவ்வொரு மதஸ்தோத்திரங்களையும் அந்தந்த மதத்தைச்சேர்ந்த பிள்ளைகள் பக்தியுடன் பாடும்படி செய்விக்கவேண்டும். அதற்கென்ற தனியாக ஒரு பெரிய கூடம் இருந்தால் மிகவும் நலம். அதற்குள் நுழையும்போதே பிள்ளைகள் மனதில் நாளடைவில் பக்தி விசுவாசம் ஏற்பட்டு எல்லா மதங்களும் பகவானை அடைவதற்கான மார்க்கங்கள் என்ற ஞானத்தைத்தாமே அவர் உணர்ந்துகொள்வார்கள். அவர் தலை முறையில் இப்போதுள்ள மதச்சண்டைகள் அற்றுப்போம். மதங்கள் கூட்டுறவுக்குச்சிறந்த சாதனமென்றும் அவர் அறிந்து கொள்வர். இவ்வித பல மததெய்வ வணக்கங்களுடன், தேச வ.. க்கப்பாட்டுகளையும் பிள்ளைகளனைவரும் உற்சாகத்துடன் ப.டும்படி செய்வித்தால், அவர்களிடம் தேச பக்தியும், ஒற்றுமையும் பெருகிவரும். இவை முடிந்ததும் நமது தேசத்திற்குப் பெருமையும் சிறப்பும் விளைத்த பெரியோர்களில் யாரேனுமொருவரை எடுத்துக்கொண்டு 5 நிமிஷங்களில் அவரது அரிய செயல்களை அனைவரும்கேட்டு உருகும்படி பிரசங்கஞ்செய்ய வேண்டும். இவரது நாமதேயங்களை தெரியாத இக்காலத்தில் இவ்வாறு இந்திய மகான்களில் சரித்திரங்களைக்கேட்கும் நம் சிறுவர்கள் அவரது வழிகளைப்பின்பற்றி நடக்க முயற்சிப்பர். அப்போது நமது தேசம் மேன்மேலும் நல்ல நிலைமையை யடையுமல்லவா?

8. நமது பள்ளிக்கூடங்களில் தண்டனை என்பதே இருக்கக்கூடாது. ஆசிரியர் அன்புவடிவெடுத்து வந்தது போல் இருக்கவேண்டும். அன்பால் சாதிக்கமுடியாத தொன்றுமில்லை. பிள்ளைகளுக்குப் பல விஷயங்களை ஊட்டுவிப்பது அவரது தொழிலில்லை. பிள்ளைகளைத்தமது சக்தியை உணர்ந்துகொள்ளும்படி செய்வதே அவரது முக்கியத் தொழிலாகும். இவ்வித அருமையான உயர்ந்த தொழில் பயத்திற்கும் முரட்டுப்புத்திக்கும் இடமில்லை. ஆத்மஞானத்தை உணர்ந்த கற்றறிந்தடங்கிய பெரியோரே ஆசிரியரா

வதற்குத் தகுதியுடையவராவர். அவர்களைத் தெரிந்தெடுத்து ஆசிரியராக்கினால், இக்கொடுந்தண்டனைகள் பள்ளியை விட்டு நீங்கிப்போகும். பிள்ளைகளும் வீணாகக்கெட்டுப் போகாமல் மேன்மேலும் ஞானத்திலும் குணத்திலும் வளர்ந்து வருவர்.

௯. அன்பும் பரோபகார சிந்தையும் அவசியம் புகட்டப் படவேண்டும். பிள்ளைகள் தாம்கற்றவைகளை ஒழுங்குபடுத்தி என்றும் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டுமாயின், அவர் தம்மினும் குறைவான ஞானமுள்ளவர்களுக்கு அன்புடனும் பக்தி சிரத்தைகளுடனும் பாடஞ்சொல்லவேண்டும். இதனால் அவர் படித்தவை எல்லாம் நன்றாக மனதில் ஊன்றி விடுகின்றன. பரோபகார புத்தியும் அவரிடம் நன்றாக வளர்ந்துவரும். பிறரிடம் கண்ட குறைகளுக்கும், அறியாமைக்கும் காரணங்களை உணர்ந்துகொண்டு அவைகளை நீக்குவதற்குப் பழகிக்கொள்வர். பிறர்க்கு உதவி செய்யும் பொருட்டே தாம் ஞானாபிவிருத்தி செய்துகொள்ளவேண்டுமென்பதை நன்றாக மனதில் ஊன்றிக்கொள்வர். இவ்வண்ணம் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றால், அவை சீக்கிரம் மேன்மையை அடையும், எல்லாரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களெனத் தம்மைக் கருதி ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொண்டு வருவார்கள். இவ்வாறு தமது சிறிய சகோதரர்களுக்குச் சொல்லிவிப்பது போலவே மற்ற கிராமங்களிலுள்ள கல்வி பயிலாத குடியானவர்களுக்கும், கூலியாட்களுக்கும் கல்விப் பொருள் கைகூடும்படி செய்யவேண்டுமென்ற அவா அவரிடம் எழும். இந்த சமயத்தில் ஆசிரியர்களும், பெற்றோர்களும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருவதோடு, மேன்மேலும் இவ்வித மேலான கர்மங்களில் அவர் இறங்கும்படி அவர்க்கு ஊக்கமளிக்கவேண்டும்.

ஆர். ரேங்காச்சாரியார் எம். ஏ. எல். டி.

(தொடரும்)

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

அத்தியாயம்.—30.

புவர்லோகம்.

ஸ்தூல சரீரத்தை விட இச்சாசரீரம் ஒருபடி உயர்வும் நேர்த்தியுமாயிருப்பது போல் பூலோகத்தை விட புவர்லோகமும் அவ்விதம் ஒருபடி உயர்வும் நேர்த்தியுமாயிருக்கிறது. தூக்கத்தினுலாவது சாவினுலாவது அல்லது ஒருவித மயக்கத்தினுலாவது ஸ்தூல சரீரத்திலிருந்து நீங்கின க்ஷணமே நாம் போய் வசிக்குமிடம் புவர்லோகமாம். அது ஒரு இடமல்ல. இருந்தாலும் அதை ஒரு இடமென்றும் சொல்லலாம். அது பரும்படியான பூலோக பிரகிருதியை எங்கும் ஊடுருவிக்கொண்டிருக்கிற சூக்ஷ்மமான பிரகிருதியாயிருக்கிறது. நாம் ஸ்தூல சரீரங்களிலிருக்கும்போது ஸ்தூல பிரகிருதியை மாத்திரம் பார்க்கிறதும் உணருகிறதுமாயிருக்கிறோம். ஆகையால் அப்போது நாம் பூலோகத்தில் வாசம் செய்கிறோம். நாம் இச்சாசரீரங்களிலிருக்கும்போது புவர்லோகப்பிரகிருதியைப் பார்க்கிறதும் ஸ்பரிசிக்கிறதுமாயிருக்கிறோம். ஆகையால் அப்போது நாம் புவர்லோகத்தில் வாசம் செய்கிறோம். ஆகையால் ஒவ்வொரு லோகமும் நாம் அதில் பிரக்ஞையுடன் வசிக்கும் காலத்தில் எதார்த்தமானதாகவும் ஒரு இடமாகவும் இருக்கின்றது.

ஒருவன் தன் ஸ்தூல சரீரமாகிய ஸ்தூல பிரகிருதியை விட்டு நழுவி அல்லது வெளியேறும் தக்ஷணத்தில் அவன் இச்சாசரீரத்துடன் புவர்லோகத்தில் இருப்பதாகக் காணுகிறுன். அவன் எப்போதும் போலவே உயிருடனிருக்கிறுன். ஆனுல் அவன் உணர்ச்சி இன்னும் அதிகமாயிருக்கிறது. ஏனென்றுல், அவனுடைய இச்சாசரீரமானது ஸ்தூலசரீரத்தைவிட அதிக இலேசாயும் நேர்த்தியாயுமிருப்பதுடன்புவர்லோக வாயுமண்டலமானது பூலோக வாயுமண்டலத்தை விட அதிக இலேசாயும் நேர்த்தியாயுமிருக்கிறது. ஆகையால்

அந்த லோகத்தின் கீழான பாகம் தவிர மற்ற இடங்களில் நகர்ச்சியானது மனோவேகம்போல் துரிதமாயும் இலகுவாயும் சந்தோஷகரமாயுமிருக்கிறது.

ஒருவன் இறந்த பிறகு தான் அந்த லோகத்துக்குப் போககூடுமென்பதில்லை. ஒவ்வொருவனும் தன் ஸ்தூல சரீரம் தூங்கும்போதும் மயக்கத்திலிருக்கும் போதும் அல்லது வேறு காரணங்களினால் பிரக்ஞை யற்றிருக்கும் போதும் புவர்லோகத்திலிருக்கிறான்.

மேற் கூறியவற்றை அறிவதற்கு ஒரு உதாரணம் கூறுவோம். உன் உச்சி முதல் உள்ளங்கால் வரை தடித்த பளுவான கம்பிளியால் செய்யப்பட்டசட்டையாலும்போர்வையாலும் நீ போர்த்தப்பட்டிருப்பதாயும், அச்சட்டைக்கே உணரும் சக்தியிருப்பதாயும், அதனால் அச்சட்டையானது வலியினால் துன்பப்படுவதையும், களைப்படைவதாயும், புண்படுவதாயும், அதனால் சிரமப்படுவதாயும், அச்சட்டையில் கேட்கவும் பார்க்கவும், முகரவும், உருசி பார்க்கவும் இயலுவதற்காக சில துவாரங்களிலிருப்பதாயும் வைத்துக்கொள்வோம். அவ்விதச் சட்டையோடு ஒரு கரடுமுரடான பாதையில் நீ பயந்தும் களைப்புடனும் சிரமப்பட்டுத் தள்ளாடிக்கொண்டு செல்வதாயும், வழியில் முன்னால் கொஞ்சதூரம் மட்டும் நீ பார்க்கக்கூடும் என்றும் வைத்துக்கொள்வோம். அப்படிப் போகும்போது திடீரென்று மேற்கூறிய சட்டையும் போர்வையும் இத்துப்போய் கீழே நழுவிவிழுந்து, அதற்குப்பதிலாய் ஒரு மிருதுவான, இலேசான, சரீரத்தின் எவ்வித மாறுதலுக்கும் ஏற்றபடி வளையக்கூடிய சட்டையானது உன் சரீரத்தைப் போர்த்திக்கொண்டிருப்பதாயும், அச்சட்டையானது வலி, களைப்பு இவைகளை உணர்த்தாததாயுமிருப்பதுடன், நீ எங்குச்செல்லவேண்டுமென்று நினைக்கிறாயோ அங்குத்திடீரென மின்னல் வேகத்துடன் உன்னை தூக்கிச்செல்லக்கூடியதாயிருப்பதாயும் வைத்துக்கொள்வோம். பூலோகத்தில் ஸ்தூல உடலுடன் இருப்பதற்கும், புவர் லோகத்தில் இச்சாசரீரத்துடன்

இருப்பதற்கும், வித்தியாசமானது மேற்கூறிய இரண்டு சட்டைகளுக்கும் என்ன வித்தியாசம் உண்டோ, அதைப் போன்றது. மேற்சொன்ன உடுப்புகள் நம்முடைய சரீரங்கள். நாம் மேலபோகப்போக அவைகள் நேர்த்தியாக இருக்கின்றன. ஏனெனில், அவைகள் நாம் வசிக்கும் லோகங்களின் பிரகிருதிகளால் அமைக்கப்படுகின்றன.

இறந்தபிறகு கொஞ்சகாலம்வரை புவர்லோக வாசமானது பூலோகவாசம்போலவே யிருக்கும். ஏனெனில், நூதனமாய் இறந்து போனதாய் சொல்லப்படும் ஜனங்கள் போய்ச்சேருமிடமானது தாங்கள் விட்டுப்போனலோகம் போலவேயிருப்பதால், அனேகர் தாங்கள் இறந்துபோனதாகவே முதலில் நம்பமாட்டார்கள். புவர்லோகத்திலுள்ள துணைவர்கள் கொஞ்சங்கொஞ்சமாய் இதையறிந்து கொள்ளும்படி செய்வார்கள். ஏனெனில் துணைவர்கள் அனேகர் அங்கேயிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில் தங்கள் ஸ்தூல சரீரம் தூக்கத்திலிருக்கும்போது புவர்லோகத்தில் பிரக்ஞையுடன் உழைக்கும் மேன்மையான மனிதர்களும் ஸ்திரீகளுமாம். இவர்கள் தவிர அங்கே வெகு காலமாய் இருக்கிற சிலரும் அம்மார்க்கமாய் மேல் லோகத்துக்குச்செல்லும்போது அங்கே தங்குகிற வேறு சிலருமாம். இவர்கள் எல்லோரும் பட்சமுள்ளவர்களாயிருப்பதுடன், குழப்பமுற்றுத்தயங்கி தாங்கள் இருக்குமிடம் இன்னதென்று அறியாமல் மயங்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு உதவி புரியத்தயாராயிருப்பவர்களாம்.

அங்கே குழந்தைகள் வெகு ஆனந்தமாய் பொழுது போக்குவார்கள். முக்கியமாய் அவர்கள் ஜாக்கிரதையாய் பாதுகாக்கப்படுகிறார்கள். புவர்லோகம் அவர்களுக்கு ரமணீயமான இடமாயும் அங்கே எல்லோரும் பட்சமுள்ளவர்களாகவுமிருப்பார்கள். அவர்களுடைய விளையாட்டுக் கருவிகளெல்லாம் உயிருள்ளவைகளாகவிருக்கின்றன. அவர்கள் கதைப்புஸ்தகங்களில் படித்த உருவங்கள் நடக்கவும் சவாரிசெய்யவும் பறக்கவும் தாங்கள் எதிர்பார்க்கும் வேலைகளையெல்லாம் செய்யவும் கூடும். ஏனெனில் நம்முடைய எண்ணங்கள் அவ்விடத்தில் எதார்த்தமான வாழ்க்கையையுடைய தீர்க்க ஜீவிகளாகவும் பலமான மனவுருவங்களாகவும் ஆகின்றன.

வி. வெங்குசாமி ஐயர்.

புனர்ஜன்மமும் கர்மமும்—வினாவிடை.

கேள்வி. புனர் ஜன்மம் என்றால் என்ன?

விடை. நாம் இப்புவியில் ஒருமுறையல்ல, பல முறை ஜனிக்கின்றோம் என்னும் உண்மையே.

கே. எல்லா ஜன்மங்களிலும் ஒரே சரீரத்திலேயா வசிக்கிறோம்

வி. அல்ல; நாம் பூமியில் ஜனிக்கும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய நிலைமைகளில் அமர்கின்றோம். அவற்றிற்கேற்ற நூதன சரீரங்களில் இயங்குகிறோம்.

கே. ஏன் அந்நிலைமைகள் அவ்வாறு மாறுபடுகின்றன

வி. இவ்வுலகில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பலவிருக்கின்றன. அவைகளனைத்தையும் கற்கும்படியான சந்தர்ப்பங்களை நாம் பெறும்பொருட்டே அந்நிலைகள் மாறுபாடடைகின்றன.

கே. எல்லாச் சன்மங்களிலும் நாம் மகிழ்வாயும் உற்சாகமாயுமிருக்கின்றோமா?

வி. இல்லை. சில ஜன்மங்களில் சந்தோஷமாகவும் சிலவற்றில் துக்கம் நிறைந்தும், சிலவற்றில் மன அமைதியுடனும், சிலவற்றில் கவலையுடனும் இருக்கின்றோம்.

கே. சில ஜன்மங்களில் நாம் ஏன் துக்கமனுபவிக்கின்றோம்?

வி. அதற்குக்காரணமுண்டு. (அஃது கீழே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.) நாம் படும் துன்பத்தினால் துக்கத்தின் கொடுமையையறிந்து பிறர் துன்புறுங்காலத்து, அவரிடம் அன்பும் அனுதாபமும் காட்டுமாறு நம்மை அஃது தூண்டுகின்றது.

கே. இவ்வன்பும் அனுதாபமும் மாத்திரமா நம்மால் ஏற்கப்படுகின்றன?

வி. அல்ல; பிறரைப்பற்றி நம்முடைய எண்ணம் (மதிப்பு) நியாயமாயும் தர்மமாயுமிருத்தல் வேண்டுமென்பதையும் பிறரது அபிப்பிராய விஷயத்தில் பொறுமை காட்டவேண்டுமென்பதையும், நமது ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களை நம் வசப்படுத்தி அடக்கி யாளவேண்டுமென்பதையும், இதைப்போன்ற மற்ற விஷயங்களையும் கற்றுக்கொள்கின்றோம்.

கே. ஆனால் நாம் தற்போதிருக்கும் நிலைமையிலேயே முன் இருந்தோமில்லையா?

வி. அன்று; இப்பொழுதிருக்கும் நிலைமையினும் மிகக் குறைந்த பக்குவத்திலிருந்தோம். இனி இதனினு முயர்ந்த நிலையை யடைவோம்.

கே. ஆதியில் நாம் மானிடச்சன்மத் தொடங்கிய காலத்து எவ்வாறிருந்தோம்

வி. மிகத்தாழ்ந்த நிலையில் வனசரர்களாயிருந்தோம்.

கே. எக்காலத்தில் இப்பிறப்புகள் நீங்கும்?

வி. கிறிஸ்து, புத்தர், இவர்களைப்போல் நாம் தெய்வத்தன்மையடையும்போது அவை யொழியும்.

கே. இவர்கள் மாத்திரந்தானா தெய்வீகம் பொருந்தியவர்கள்?

வி. அல்ல; அவர்களுக்கு முந்தியே பலரிருந்திருக்கின்றனர்.

கே. ஆனதால் நாம் அடிக்கடி பிறப்பதின் கருத்து பற்பல பாடங்களை இவ்வுலகினில் கற்று பலவேறு குணங்களை சம்பாதிப்பதா?

வி. ஆம். ஒவ்வொரு ஜன்மமும் நமது பள்ளிக்கூட வாழ்க்கையில் ஒரு தினம் போன்றது. அது முற்றுப் பெற்றதும் நாம் வீட்டிற்குத் திரும்பி மறுநாட் பாடங்களைத் தயாரிக்கின்றோம். இது போலவே மரணமடைந்த பின்னர் ஸ்வர்க்கலோக மெய்தி புனர் ஜன்ம மெடுத்தலும்.

கே. ஆனால் நாம் பல ஆட்களாயிருந்திருக்கிறோமா?

வி. ஆம்; இன்னும் பல பேர்களாகவும் ஆவோம்.

கே. நாம் ஒரே பெயராகவும் பல பெயராகவுமிருத்தல் எவ்வாறு சாத்தியம்?

வி. பல பெயரென்ருல் பல சரீரங்களென்றர்த்தம். ஆனல் இச்சரீரங்களில் இயங்கும் ஆன்மா ஒருவனே.

கே. அப்படியானல், "நாம்" என்பது யார்?

வி. நாம் என்ருல் ஆன்மாக்கள் என்றுபொருள் படும் சரீரம் இவ்வான்மாவின் உடை அல்லது அங்கியேதவிர வேறல்ல. இதன் வேலே முடிந்து இது ஜிரணமாகும் பொழுது இதனே ஆன்மா களைந்து விடுகின்ருன்.

கே. நாம் பல ஜன்மங்கள் எடுத்திருப்பது உண்மையாயின் அவை ஏன் நமது ஞாபகத்திலில்லே?

வி. ஏனெனில், ஒவ்வொரு ஜன்மத்திலும் நூதன நூதனமான சரீரத்தையும் நூதனமான மூளையையும் பெறுகின்ரேம். இம் மூளே தான் அனுபவியாததோர் விஷயத்தை எவ்வாறு ஞாபகப்படுத்த முடியும் ஞாபக சக்தியென்பது மூளேயைப் பொறுத்த விஷயம்.

கே. நாம் சென்ற ஜன்மங்களிற் கற்றவற்றை ஞாபகப் படுத்த முடியாதாயின் அவற்றைக் கற்றதனலாய பயன் யாது?

வி. நமது (ஸ்தூல) மூளேக்கு அவை ஞாபகமில்லாவிடினும், ஆன்மா தனக்கு முக்கியமான எவற்றையும் ஞாபகத்தில் வைத்திருக்கின்ருன். மனச்சாக்ஷி என்று சொல்லப்படுவது இவ்வான்மாவினது அநுபவங்களின் பல ரூபமேயாம். நமது மனே விருத்தி, விருப்ப வெறுப்புக்கள் ஓர் தொழிலேச் செய்வதில் அல்லது அறிவதில் அவா அல்லது ஆற்றல் ஆகிய இவை நம்முடைய, அதாவது ஆன்மாவினுடைய சென்ற கால அனுபவங்களேயும் வாசனையையும் காட்டுகின்றன. இவையாவும் ஆன்மாவின் அறிவினேடு கலந்து நிற்கின்றன. எனவே முன் ஜன்மங்களின் சாரத்தை இவன் பெற்றே நிற்கின்ருன்

கே. நமது முன் ஜன்மங்களின் விவரணங்கள் யாவையும் பூரணமாய் ஞாபகிக்கும் காலம் எப்பொழுதேனும் வருமா?

வி. வரும். நமது ஸ்தூல தேகம், ஸ்தூல வுலகவியவகாரம் இவற்றிற்கு மேலாக நமது மனதையும், அறிவையும், உயர்த்தக்கூடிய பக்குவத்தை யடைந்த பின்னர் இஃது சாத்தியமாகும்.

கே. இவ்வாறு செய்யக் கூடியவர்கள் எவரேனுமுளரா?

வி. ஆம்; பலரிருக்கின்றனர்.

கே. ஜன்மங்கள் பலவெடுத்து அதன் மூலமாய் சகலத்தையும் நாம் அறியக் கூடிய விம்மார்க்கத்துக்கு யாதேனும் பெயருளதோ?

வி. இது விகாச முறை யெனப்படும்—ஆன்ம விகாச முறை அல்லது ஆன்ம பரிபக்குவ மார்க்கம் எனலாம்.

கே. ஒவ்வொரு ஜன்மத்திலும் நமக்குக் கிடைக்கும் வாழ்க்கை எதனைப் பொறுத்தது நமது சித்தவிருத்திக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

வி. நாம் முன் ஜன்மங்களிற் செய்த கருமத்திற் கேற்ற ஜன்மங்களையே பெறுகின்றோம்.

கே. இந்நியதிக்குப் பெயர் யாது

வி. இதற்குக் கர்மம் என்று பெயர்.

கே. கர்மம் என்றால் என்ன?

வி. நாம் செய்யும் வினையின் பயனை நாம் அனுபவித்தே தீரவேண்டுமென்ற நியதி.

கே. இதற்கு வேறு பெயருமுளதோ?

வி. உளது. காரணகாரிய பரம்பரை அல்லது தொடர்ச்சி யென்றும் அதனைக் கூறலாம்.

கே. இந்நியதியைத் தொடங்குவது யார்?

வி. நாமே. நாமே இந்நியதிக்கு உட்படுகின்றோம்.

கே. அஃதெவ்வாறு?

வி. நமது எண்ணங்களாலும், செயல்களாலும், நாம் கர்மம் செய்கின்றோம். அன்புள்ள சிந்தனைகளைச் சிந்தித்து, அன்புள்ள செயல்களைச் செய்வோமாயின் பிற்காலத்தில் இவை யாவும் நமக்குத் திரும்பி வந்து நற்பயன்களைத் தருவனவாகும்.

தீச்செயல்களையும், தீயவெண்ணங்களையும், நாம் விதைப்போமாயின் தீக்கருமத்தையே அறுவடை செய்வோம். அவற்றை நாம் அனுபவித்தே தீரவேண்டும்.

கே. நாம் இப்பொழுது கஷ்டப்பட்டு துக்கமடைந்தால், அதன் காரணம் யாது?

வி. நமது பழைய வினையே.

கே. அதன் பொருள் யாது?

வி. முன் ஜன்மத்தில் நாம் விதைத்த தீவினையை மீண்டும் நாம் அறுவடை செய்கிறோம் என்பது தான் பொருள்.

கே. இறைவன்தானே நம்மை இவ்வாறு துன்புறுத்துக்குகிறார்?

வி. அல்ல. நாம் அவரது நியதிக்கு மீறி நடப்பதால் நாம் துன்புறுகின்றோம். ஈசுவர சங்கற்பமாகிய அந்நியதியே நம்மைத் துன்புறுமாறு செய்து நாம் அதனை மீறிநடந்து விட்டோமெனக் காண்பிக்கின்றது. ஆதலால் நாம் அதனையனுசரித்தே நடத்தல் வேண்டும்.

கே. இச்சமயத்தில் நாம் யாது செய்கின்றோம்?

வி. பழைய வினையின் ஓர் பாகத்தை அனுபவிப்பதோடு, புதிய வினையுஞ்செய்து வருகின்றோம். இதன் பலனைப் பிற்காலமனுபவிப்போம். நமது வருங்காலத்திய நிலைமை இப்பொழுது நாம் யாது எண்ணுகின்றோம், யாதுசெய்கின்றோம் என்பதைப் பொறுத்தது.

கே. இவ்வருங் காலத்திய நிலைமைகளை எவ்வாறு நாம் இப்பொழுது சீர்ப்படுத்தலாம்?

வி. நல்லெண்ணம், நல்லுணர்ச்சி, நற்செய்கை, இவற்றுற்றான். நமது நல்லெண்ணங்கள் நம்மிடம் நற்குணத்தையமைக்கும். நல்லுணர்ச்சிகள் பிற்காலத்தில் நற் சந்தர்ப்பங்களையளிக்கும். நற்செயல்களோ ஸ்தூலவுலகில் நற்சக்திகள் நம்மைச் சூழ்ந்து நிற்குமாறு உதவும்.

கே. இந்நன்னிலைமைகள் நமக்களிக்கப்படுவதின் கருத்து நாம் சுகமாயும் சந்தோஷமாயு மிருக்குமாறு?

வி. அல்ல. நாம் பிறர்க்கு நன்குதவுமாறே.

கே. ஆனால் நாம் சுகமனுபவிப்பதும் சந்தோஷமாய் வாழ்வதும் குற்றமா?

வி. அல்ல. ஆயினும் பிறர்க்குதவி புரிவதாலுண்டாகும்ஆனந்தமே மிகவும் மேலானது. பிறர்நலங் கருதுவது உத்தமர் தகைமை.

கே. மேற்கூறியவாறு நாம் ஆனந்தம் பெறுவதுமாத்திரம் சுயநயமான சந்தோஷமாகாதோ?

வி. அவ்வாறாகாது. அவை யிரண்டிற்கும் வித்தியாசமுளது. பிறர்க்குதவுவதும் நன்மைசெய்வதும் நமக்குச் சுயநயமில்லாத தோர் ஆனந்தத்தைத் தருகின்றது. இஃது இறைவன் தன்மையே யாகும். மற்றொன்று அவ்வாறல்ல.

கே. கர்மம் என்ற நியதிப் பிரகாரம நாம் எதுவரை ஜனனமெடுக்கவேண்டும்?

வி. நாம் பூரணம் பெற்றுத் தெய்வீகம் பொருந்திய மனிதராயாகும் வரை ஜனனமெடுத்தே தீரவேண்டும்.

கே. இம்முடிவை நாம் துரிதப்படுத்த முடியுமா?

வி. முடியும்.

கே. அஃதெவ்வாறு?

வி. நமது தன்மையிலுள்ள வெறுப்பு, கோபம் முதலிய குணங்களை அன்பு, பொறுமை, இவைகளாக மாற்றுவதாலும் ஏனைய தோஷங்களை மேலான குணங்களாக நமது மனவலிமையினால் மாற்றுவதாலுந் தான.

கே. இது சுலபமா?

வி. அல்ல. ஆயினும், நாம் பெருமுயற்சி செய்யவேண்டியதே.

கே. முடிவில் நாம் சித்தி பெறுவோமா தவறி விடுவோமா?

வி. ஒருபோதும் தவறிவிடமாட்டோம். சித்தி பெற்றே தீருவோம். ஏனெனில், அஃது ஈசுவர சங்கற்பம். அதனையெதிர்த்துச் செல்ல எவராலுமொண்ணாது. ஆனால், நாம் இடைவிடாது முயற்சித்தல் வேண்டும். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.

ஆர். பஞ்சாபிகேசையர்.*

* புனர்ஜன்மம் என்ற ஆங்கிலப் பத்திரிகையினின்று எடுத்தது.

ஸ்திரீகளுக்கு உபந்நியாசம்.

என் பிரியமுள்ள சகோதரிகளே.— இன்று என்னை உங்கள் முன்பாக சில வார்த்தைகளை பேசும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது, இந்தப் பழமையானவும், மஹரிஷிகளால் காப்பாற்றப் படுவதும் குருமூர்த்திகளால் நேர உபதேசிக்கப் படுவதும், தீக்ஷை பெற்ற மஹான்களால் நிறைந்திருக்கிறதுமான இந்த சபையில் எனக்குத் தெரிந்ததைப் பாடம்போல் ஒப்புவிக்கிறேன். அநாதியான இந்த சபையானது நடுவில் கொஞ்சகாலம் மறைபட்டிருந்தும் திரும்பி விளங்கி விரிய ஆரம்பித்து அரை நூற்றாண்டு ஆகிறது. இவ்வளவு காலமான போதிலும் இதன் தாத்பர்யம ஒவ்வொருவருக்கும் சரியாகத் தெரியவில்லை. இச்சபையில் சகோதரபாவம், மதத்துவேஷமின்மை, சித்திகளின் உண்மை இவைகளே முக்கிய விஷயங்களாகக் கருதப்படுகின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று ஊடுருவியிருக்கின்றன. ஓரே விஷயமாகவும் ஆகின்றன. தேசபேதத்தாலும் பாஷை பேதத்தாலும், ராஜபேதத்தாலும், முடிவாக, காலபேதத்தாலும், பிளவு பட்டிருக்கிற ஜனங்கள் இப்போது ஒன்றுசேரவேண்டியது முக்கியமான காரியமாக இருக்கிறது. ஏனென்றால், அந்தந்த காலத்துக்கும் ஜனங்களுடைய புத்தி சக்திகளுக்கும் தக்கபடி உலகம் நடைபெற்றால் தான் க்ஷேமமுண்டாகும். அப்படியே யுகங்கள் தோறும் ஸ்ரீ வியாசர் அவதாரமாகி வேத சாஸ்திரங்களை விரித்தோ சுருக்கியோ தெளிவுபடுத்தியிருப்பதாக நம்முடைய புராணாதிகள் கூறுகின்றன. அப்படியே தற்காலத்திய க்ஷேமத்துக்கு வேண்டியவைகள் இச்சபையோரால் வெளியிடப்படுகின்றன. மேலும் சமத்வமென்கிற விசேஷமானது சாசரீகத்தில் முற்போக்கடைந்தோமென்று சொல்லிக் கொள்கிற மேல் நாட்டாரின் 'மேஸன்' கூட்டத்தில் கூட இல்லை ஸ்திரீ சுதந்திரம் இந்த பிரஹ்மஞான சபையில் முக்கியமாக விருக்கிறது.

ஸ்திரீகளிடம் ரகசியம் நிற்காதென்று சொல்வதற்குக் காரண மெல்லாம் புருஷர்களின் குற்றமே. ஸ்திரீகளிடம் உண்மை ஒளிக்கப்படுவதாலும் அவர்களுக்குக் கல்வி விசேஷமாகப்புகட்டாததாலும் தான் அவர்களிடம் நம்பிக்கை உண்டாகிறதில்லை. இப்படி நிஜ ஞானம் குன்றிப்போயிருக்கிற இந்த சமயத்தில் நாம் ஸ்திரீகளுக்குக் கல்வியை அதிகமாய்ப் புகட்டவேண்டும். இயற்கையாக, ஞானம் இருந்தாலும் பயிற்சி பெறுவிட்டால் ஞானம் விருத்தியடையாது. அப்பயிற்சியும் ஈசுவர நம்பிக்கையும், மதவிசாரணையும், கூடினதாக இருக்கவேண்டும். அது இப்போது நமக்கில்லை யென்றே சொல்லலாம். அரசாட்சியார் வேறு மதஸ்தராயிருக்கிறார்கள். நம்மவருக்குள் பலபாகுபாடுகள் உண்டாகியிருக்கின்றன. நாம் தெய்வம் உண்டா இல்லையா, உண்டானால் அது எத்தன்மையது என்கிற சந்தேகப்படும் ஸ்திதியில் இறங்கிவிட்டோம். சில வேளைகளில் நாம் மூடபக்தியாய் ஈசுவரனை நினைக்கின்றோம். வழி சரியாகயில்லை. அவ் வழியை இப்பிரம்ம ஞானப் பயிற்சியால் கண்டுகொள்ளலாம். முதலில் சன்மார்க்கத்தைநாடுபவர்கள் இன்னின்ன நடையைக்கைக் கொள்ளவேண்டும், இந்த இந்த குணங்களை அபிவிர்த்தி செய்து கொள்ளவேண்டும், இந்த இந்த துற்குணங்களை விலக்கவேண்டும் என்பது முதல் படி. இவைகள் நம் அனுசரணையிலில்லையா என்று ஊன்றிப் பார்ப்போமானால் இல்லை யென்றே சொல்லலாம். அபிவிருத்தி யடைந்தவர்களுடைய மனோவிருத்தி சம்பூர்ணமான தயை, கருணை, இரக்கம் நிறைந்திருக்கும். இந்த விஷயத்தில் நாம் வெகுவாய் பின்னடைந்து விட்டோம். சகல பூதங்களிலும் ஆத்மா ஒன்றே யென்றும் அந்த ஆத்மா பரமாத்மாவுக்கிருப்பிடமென்றும் எண்ணவேண்டும் பகவான் கீதையில் அப்படியே கூறியிருக்கிறார். விரித்து நமக்கு சொல்லுவோரில்லாததினால் குறுகிய பாகத்தில் என் தேசம், என் ஊர், என் பந்து, என் பிள்ளை, கடைசியாக நானே வேறு என்ற பாவம் உண்டாகி சரியான அபிமான மற்றுப்போகிறது. நம்முடைய ஆத்மாவை நாம் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்கிற மமகாரத்தினால் பரமாத்மாவைக்கூட பிரிக்கப்பார்க்கிறோம். அப்படியில்லாமல் சுகம் துக்கம், கஷ்டம் சந்தோஷம் இவைகள் பிராணிகளுக்கு சமமென்றும் ஒவ்வொருவனுக்கும் ஈசுவரனால் கிடைத்திருக்கும் இவைகளில் எல்லோருக்கும் சிறிய பங்கு உண்டென்றும் அவைகள் புதைத்துவைத்த பொருளைப்போலாகாமல் விதைத்து நட்ட பயிரைப்போலாகுமென்றும் கருதவேண்டும்.

சில வேளை சர்வக்ஞத்துவம், சர்வசக்திமத்துவம், சர்வவியாபகத்துவம் உள்ள ஈசுவரனே ஏன் பிராணிகளை சமத்துவமாய்

நடத்தவில்லையென்று எண்ணுகிறோம். அது தப்பு. அது நான் முன் சொன்னபடி பூர்வஜன்மங்களில் போட்ட வித்தின்பலன். நல்லோர்களுக்கு நஷ்டங்களும் பொல்லாருக்கு சுகங்களும் உண்டாகும்போது அவைகள் கடவுளால் அவர்களுக்கு ஒழுங்கிடப்பட்ட விருத்தியின் பாகங்களென்றும், ஓடுகிற நீரோட்டத்தின் அற்ப சுழல்களைப்போலவென்றும், நிரந்தரமானவைகளல்லவென்றும், தெரிந்து கொள்ளவேண்டும். இவைகளைப்பற்றி நம்முடைய இந்துமதமானது நேர்சாட்சியாக இருக்கிறது. மற்ற மதங்களும் அவை ஏற்பட்ட காலத்திற்கு ஏற்றபடியே ஏற்பட்டிருக்கவேண்டும். அதையும் நாம் ஆராயவேண்டும். அப்போதுதான் நம்முடைய மதத்தின் உண்மையும் பிற மதத்தின் தாத்பரியமும் ஒற்றுமையும் நமக்குப் புலப்படும்.

நம்முடைய மதத்தின் மற்றொருபெருமையைப் பாருங்கள். மற்ற மதங்களைப்போல பரதூஷணையாக உன் மதம் பிரயோஜனமற்றது என் மதத்திற்கு வந்து விடுங்கள், என்று சொல்வதில்லை. நடுவில் கொஞ்சகாலம்வேறு மதஸ்தர்களை தன் மதத்தில் சேர்த்துக் கொள்ளாமலிருந்தாலும் இப்போது அந்த கர்வமும்போய் சாந்தியடைந்து வருகிறது. சிலவிடங்களில் சுத்தி சபையென்று ஏற்பாடாகி வருகிறது எல்லோருக்கும் சந்தோஷத்தை கொடுக்கத்தக்கது.

நம்முடைய மதத்தை நாம் வேரூன்றிப்பார்க்காத தவறினால் இதில் பூததயை கிடையாதென்று எண்ணிவிடுகிறோம். பூததயையில்லாமல் சீதாதேவியார் வளர்ந்திருக்கமுடியுமா? மற்றவர்களைப்போல அந்தக் குழந்தையை ஜனகர் வித்தியாசமாக கருதினாரா? தன் சொந்தப் பெண்ணுக்கு மேலாகக்கருதினாரா? போகட்டும். ஜனகர் ஞானி, சீதை தேவியென்று சொல்லலாம். கர்ணமஹாராஜா எப்படி வளர்ந்தார். வித்தியாப்யாசம் எப்படி கொடுக்கப்பட்டது? சத்யகாமனுக்கு எப்படி உபதேசம் கிடைத்தது? சாஸ்திர ஆராய்ச்சி குன்றி நிஜம் மறைந்து போலி ஞானமும் மூடபக்தியும் அதிகமாகி நாம் பலஹீனர்களாகி விட்டோம். தற்காலம் இப்போது நமக்கு முதலாகத்தெரிந்து கொள்ளவேண்டியது கல்வியின் மூலமான மத விஷயமும் ஒற்றுமையுமேயாம். திரும்பப் பழைய குணங்களை விருத்திசெய்து கொள்வதற்கும் வேறு தேசங்களிலுள்ள நன்மைகளை கவனிப்பதற்கும் இது ஏற்ற காலமாயிருக்கிறது. தந்தி, தபால், ரயில், புகைக்கப்பல் முதலிய வசதிகளோடு கூடியும் மற்ற தேசத்தார் வரவு மாத்திரமல்லாமல் நம்மவர்களும் அயல் நாடுகளுக்குச்சென்று சீர்திருத்தங்களை கற்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

சகோதரிகளே! இப்படிப்பட்ட நல்ல காலத்தை தவற விடாமல் நாமும் முன்னுக்குவர பிரயத்தனப்படவேண்டும். அதாவது குறுகிய மார்க்கத்தில் சென்று நாம் படித்தால் போதுமென்று நினைக்கக்கூடாது. மற்ற சகோதரிகள் முன்னுக்கு வந்தால் தான் நமக்கு நன்மையுண்டாம். அவர்களை கூடிய வரையில் கூட்டமாக சேர்த்து படிப்பிக்கபபாடுபடவேண்டும். நம்மால் முடியாதென்று அதைரியப்படக்கூடாது. சுய நலத்தைவிட்டுப் பாடுபடுகிறவர்களுக்கு சகாயம் செய்ய மஹாத்மாக்கள்தேடிக்கொண்டிருக்கிறார்கள். ராஜாங்கத்திலும் இந்த ஏற்பாடுகளிருக்கின்றன. ராஜாங்கம் நம்மை பரீட்சை செய்து கூலி கொடுக்கிறது. இந்த சபையைச் சேர்ந்த பெரியோர்களே கைகொடுத்து வழி காட்டுகிறார்கள். நம்முடைய அறியாமை யென்னும் இருட்டைத் தொலைக்கவேண்டும். தெய்வ நம்பிக்கை யென்பதென்னவென்றால் உள்ளும்புறமும் ஒத்து நடக்கும் வழி தெய்வதேயாகும் மதப்பற்று என்றால் பிறமதங்களையும் நேசிக்கவேண்டுவதாகும். சகோதரபாவம் என்றால் ஒருவரையும் இகழலாகாது. இந்த மூன்று குணங்களையும் விருத்திசெய்ய கல்வி முக்கியமானது. நம் தேசத்தில் நூற்றுக்கு ஒரு ஸ்திரீ கல்வி கற்றிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. அந்தக்கல்வியும் ஜீவனார்த்தமும் தற்பெருமைக்குமே காரணமாகவிருக்கிறது. இந்த ஸ்திதியில் ஜன ஒற்றுமை கூடாது. ஸேவா ஸதநத்தை நடத்திவரும் காலஞ்சென்ற மஹாதேவ கோவிந்த ராணடே அவர்கள் பத்னியார்போலவும் சகோதரர் ஜஸ்டிஸ் சந்திரசேகர ஐயர் தர்மபத்னி போலவும் வேலை செய்ய முன்னுக்கு வரவேண்டும். இப்போது பிரயாகையில் நடந்த கும்பமேளா உற்சவத்தில் ஜன ஊழியச் சங்கத்தார் தர்ம சேவகம் செய்தது போல உழைக்கவேண்டும்.

(இன்னும் வரும்)

மங்களாம்பாள்.

பத்திரிகை விமர்சம்.

கல்வி—இரண்டாம் தொகுதி 1 & 2 பகுதி.

சென்ற வருஷம் ஸ்ரீ ஆர். எஸ் நாராயணசாமி ஐயர், அவர்கள் பத்திராசிரியராக விருந்து நடத்திவந்த இத்தமிழ் பத்திரிகையை இவ்வருஷம் அவருடன் ஸ்ரீ எம். எஸ். சுந்தர சர்மா பி. ஏ. அவர்களும் சேர்ந்து ஆசிரியராக நடத்திவருவதாகத் தெரியவருகிறது. எற்கனவே கலைசிற்பம் முதலிய விஷயங்களைப் பற்றி சர்மா அவர்கள் இப்பத்திரிகைக்கு வியாசங்கள்கொடுத்துள்ளார். சர்மாஅவர்கள் இன்னும் நெருங்கிய சம்பந்தத்தைப் பெற்றுள்ளார் ஆதலால், கலை சிற்பம் சித்திரம் முதலிய விஷயங்களைப்பற்றி அதிகமான அறிவை இப்பத்திரிகை பரவச்செய்யும் என்று ஊகிக்க இடமிருக்கிறது. ஆர். எஸ். நாராயணசாமி ஐயரவர்கள் ஸம்ஸ்கிருதத்திலிருந்து ரகுவம்சத்தை தமிழ்ப்படுத்தியிருக்கிறார்கள் அவர்களே கோவலன் என்ற ஒரு புதிய நாடகத்தையும் தொடங்கியிருக்கிறார்கள். மற்றும் சில விஷயங்களுமிருக்கின்றன. இப்பத்திரிகை இனியும் தமிழுலகுக்கு பெரும் பயனைப் பெய்துகொண்டு வரும் என்று எதிர்பார்க்கிறோம்

புத்தக விமர்சம்.

ஸாக்ரடீஸ் சரித்திரம். மதனப்பள்ளி காலேஜ் ஆசிரியர் ஆர். ரெங்காசாரியார் எம். ஏ., எல். டி., இயற்றியது. விலை அணா 12.

நமது பத்திரிகையைப் படிப்பவர்க்கு ஆசிரியர் அவர்களை நன்றாகத் தெரியும். அவர் தனது அரிய வியாசங்களால் படிப்போர் மனதைக் கவர்ந்து, அறிவைப் புகட்டி உயர் நோக்கங்களை யுண்டு பண்ணும் வல்லமையுள்ளவர். இப்புதிய புஸ்தகத்தைப் பார்வையிட மிகவும் மனமகிழ்ந்தோம். கிரீஸ் தேசத்தில் பிறந்து அத்தேசத்துத் தலைநகரான ஆதன்ஸ் நகர வாசிகளது மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்திற்குமாகத் தமது வாழ்நாள் முழுவதும் கழித்தவரும் என்றும் அவரது புகழுடம்பால் ஜீவித்து வருபவருமான ஸாக்ரடீஸின் சரித்திரத்தை நம் நாட்டார் அறியவேண்டியது மிகவும் அவசியமே. அப்பெரியாரது சரித்திரத்தை சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறியிருக்கும் இவ்வரிய புஸ்தகத்தை இயற்றியதற்காக ஆசிரியர் அவர்கட்கு தமிழுலகம் மிகவும் நன்றி பாராட்டற்பாலது.

ஸாக்ரடீஸைப் போன்ற மகான்கள் உலகத்தில் அபூர்வமாக அவதரிக்கிறார்களே யொழிய, அடிக்கடி அத்தகைய பெரியாரைக் காண்பதரிது. அஞ்சாமை யென்ற அரிய குணத்தை இம்மகான் பல முறை உலகத்தார் மெச்சும்படி காட்டியுள்ளார். தன் தாய் நாட்டிற்கு விரோதிகளுடன் போர்முனையில் நின்று கடும்போர் புரிந்து பலமுறை தம் மன வுறுதியைக் காட்டினார். பின்னர் அபவாதமான பொய்க் குற்றங்களை இவர்மேல் இவருடைய விரோதிகள் சாட்டியபோது சபை முன்னர் நின்று நிர்ப்பயமாய் தன்னுடைய எதிர்வாதத்தைக் கூறினார். ஸத்யத்தைக் கடைபிடித்த இம்மகான் யமனுக்கு எள்ளளவேனும் பயப்படாதவராகயிருந்ததால் தலைவணங்காது நியாயசபை முன்னின்று தன்னுடைய குற்றமின்மையை கம்பீரமாய் எடுத்துக் கூறினார். இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அப்பால் இம்மகானுக்கும் பணமும் செல்வாக்கும்வாய்ந்த பல உற்றநண்பர்கள் இருந்தும், அவர்கள் இவரை உயிர்தப்பிப்போகும்படி காவலாளர்களைக் கைவசப் படுத்திக்கொண்டு எப்படியாவது ஊரைவிட்டு ஓடும்படி மிகவும் வேண்டியும் அங்ஙனம் செய்ய இணங்காமலிருந்தது இவரது மன உறுதியையும் அஞ்சாமையையும் தெற்றென விளக்குகிறது. இவருக்கிட்ட மரண தண்டனையை நிறைவேற்றும்பொருட்டு இவரிடம் கொடுத்த விஷப்பானத்தை வாங்கிப்பருகியதும், சாகும்தருணம் வரை சிநேகிதருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்ததும் அவர்களுக்கு நற்புத்தியைப் புகட்டி வந்ததும் இவருடைய மன அமைதியைக் காட்டுகிறது.

ஸாக்ரடீஸின் தர்க்க முறையென்று உலகத்தில் பிரசித்தி பெற்றிருப்பது யாதென்னில் சாதாரணமாய் ஜனங்கள் முழு அர்த்தத்தையும் தீர அறியாமல் உபயோகிக்கும் பதங்களைப்பற்றி அவர்களுடன் சம்பாஷித்து பல மடக்குக் கேள்விகளால் உபயோகிக்கும் பதங்களின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தி மக்களுடைய அறிவைப் பரவச் செய்தலேயாம். இம்முறையில் தெருக்களிலும் தோட்டங்களிலும், சந்தை யிடங்களிலும், மற்ற பொது இடங்களிலும் நின்று கொண்டு எதிர்ப்பட்டவர்கள் யாராயிருந்தாலும், தனிகராயிருந்தாலும், வறியராயிருந்தாலும், பண்டிதரானாலும், பாமரனானாலும், செல்வாக்குடையவனாயிருந்தாலும் அஃதில்லாதவனாயிருந்தாலும், வித்தியாசமில்லாதபடி இவர் உண்மையை விசாரிப்பதிலேயே காலத்தைக் கழித்து வந்தார். ஆனால் தனக்குத் தெரியாத விஷயமில்லை யென்று கர்வம் மிகுந்தவர்களுக்கு இம்மகான் அவர்களுடைய அறியாமையைக் காட்டிய உடன இவர் பேரில் விரோதம் எற்பட்டது. ஆகையால் தான் இவர் பேரில் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் உண்மையை யாவரும் அறியும்படி செய்வதே இம்மகானுடைய நோக்கமே யொழிய மற்றவர்களை மானபங்கம் பண்ணவேண்டும் என்பது இவர் நோக்கமில்லை.

இன்னும் ஸாக்ரடீஸைப் பற்றி யறிய வேண்டிய விஷயங்கள் பலவிருக்கின்றன, அவைகளை இப்புத்தகத்தை வாங்கிப் படித்தால் அறியலாம். உத்தமர்களின் சரித்திரத்தை அழகிய சொல் நயம்பொருந்திய நடையில் வரையவேண்டியது மிக அவசியமாம். புத்தகம் முழுவதும் மிகவும் சிறந்த வசன நடையில் அமைந்துள்ளது. ஆனால் சிற்சில பாகங்களில் முக்கியமாய் "தெய்வக்குறி" என்ற 8-வது அத்தியாயத்தில் சொன்னயமானது பெரிதும் போற்றத்தக்கது.

இவ்வரிய புத்தகமானது தமிழில் அபிமானமுள்ளவர் யாவரிடத்திலும் இருக்கவேண்டிய சிறந்தபுத்தகமாகும். இனிமேலும் இது போன்ற பல நூல்களை இயற்றி தமிழகத்தாரின் அறிவைப் பரவச் செய்வார் என்று எதிர் பார்க்கிறோம்.

சமாசாரக் குறிப்பு.

ஆலங்குடி:—புதுக் கோட்டை சமஸ்தானத்திலுள்ள இங்கிலீஷ்ப் பள்ளிக் கூடங்களில் மத சம்பந்தமான படிப்பை சொல்லிக் கொடுக்கவேண்டியதவசிய மென்று நமது சகோதரர் K. S. இராமச்சந்திர ஐயர் ஷை சமஸ்தானம் மகா-ள-ள-ஸ்ரீ தர்பார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள அவர்கள் அந்த அனுசரித்து அத

ற்கு வேண்டிய பாடங்களடங்கிய புஸ்தகங்களைக் குறிப்பிட்டுத் தெரிவிக்கும்படியாக ஒரு கமிட்டியை யேற்படுத்தினார்கள். ஷை கமிட்டியார்கள் கூடி ஆலோசனை செய்து புஸ்தகங்களை குறிப்பிட்டு முடிவான ரிப்போர்ட்டு செய்துவிட்டதாகவும் ஷை ரிப்போர்ட்டு மகா-௱-௱-ஸ்ரீ தர்பார் அவர்கள் ஆலோசனையிலிருந்து வருவதாகவும் தெரிகிறது. சீக்கிரம் உத்தரவு செய்து விடுவார்களென்று நம்புகிறோம்.

புதுக்கோட்டை கஸ்பாவிலிருக்கும் கல்லூரியில் படிக்கும் பிராமணப்பையன்களுக்கு அவர்கள் தினசரி செய்யவேண்டிய சந்தியாவந்தனத்துக்குறிய மந்திரங்களை சொல்லிக்கொடுக்க யேற்பாடு செய்ய வேணுமென்று ஷை சகோதரர் மகா-௱-௱ஸ்ரீ தர்பார் அவர்களைக் கேட்டுக்கொள்ள அவர்களும் அதை அங்கீகரித்திருப்பதாகவும் தெரியவருகிறது.—சந்தியாவந்தனத்தில் தேற்சியடைந்த பையனுக்கு வருஷாவருஷம் தன் தகப்பனார் பெயரால் வெள்ளிப் பதக்கம் ஒன்று பரிசு அளிப்பதாக ஷை சகோதரர் ஒப்புக்கொண்டு அதற்கு வேண்டிய யேற்பாடு செய்திருப்பதை வந்தனத்துடன் தர்பார் அவர்கள் அங்கீகரித்திருப்பதாகவும் கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம்.

கிராமந்திரங்களிலும் தாலூகா அல்லது பல கிராமங்களை வட்டமாகச் சேர்த்த வட்டங்களிலுமுள்ள சிவில் கிரிமினல் சம்பந்தமான வழக்குகளை ஜனங்களுக்கு அதிகப் பொருள் செலவுக் கிடமன்னியில் விசாரித்துப் பைசல் செய்வதற்கு அனுகூலமாக பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் யேற்படுத்தவேணுமென்று கோரி ஷை சகோதரர் ஒரு பஞ்சாயத்து மசோதா ரெகுலேஷன் தயார் செய்து மகா-௱-௱ஸ்ரீ தர்பார் அவர்களுடைய ஆலோசனைக்கனுப்பி யிருப்பதாக அறிய திருப்திகரமாகயிருக்கிறது.

பாதை ஓரங்களிலுள்ள கள்கடை சாருயக் கடைகளை அப்புறப்படுத்தி தூரமான ஸ்தலங்களில் யேற்படுத்தவேணுமென்றும் ஷை கடைகளின் சங்கையைக் குறைக்கவேணுமென்றும் கோரி மகா-௱-௱ஸ்ரீ தர்பார் அவர்களுக்கு ஷை சகோதரர் மனுச் செய்திருப்பதாகவும் அறிகிறோம்.

பரோபகார சிந்தையைக்கொண்ட இவரைப்போலொத்த ஒருவர் எங்கிருந்தாலும் சந்தர்ப்பம் பார்த்திருந்து பொது ஜன உபகாரத்தைப் பலவிதத்திலும் செய்துவருவார்களென்பதற்கு இவர் நடத்தையே திருஷ்டாந்தமாகும்.